**செ.வெ.எண்-51** **நாள்-25.02.2019**

## அரியலூர் மாவட்டத்தில் சுகாதாரத்திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துவத்துறை சார்பாக சுகாதாரத்திருவிழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமினை, மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.மா.சந்திரகாசி** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

இம்முகாமில், 700-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பொதுமருத்துவம், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு முறிவு சிகிச்சை, இதயநோய் மருத்துவம், சித்த மருத்துவம் மற்றும் கண்பரிசோதனை, இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இம்முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்து மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படும். பின்னர், 2 பெண் குழந்தைகள் பெற்றெடுத்த தாய்மார்கள் குடும்ப கட்டுப்பாடு செய்தவர்களுக்கு ஊக்கப்படுத்தும் வகையில் சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கினார்கள்.

முன்னதாக, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் சித்த மருத்துவம், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு முகமை ஆகிய துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்ட விளக்க கண்காட்சியினை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, அரசு மருத்துவமனை அலுவலர்கள் மரு.கண்மணி, மரு.கொளஞ்சிநாதன், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மரு.முத்துகுமார், காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர் மரு.ராஜசேகர், வட்டார மருத்துவ அலுவலர் மரு.அனிதா, மரு.உமாமகேஷ்வரி மற்றும் அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**